தொகுப்பு இல. 22

இதழ். 2

கொழும்பு இறையியல் கல்லூரி

வைகாசி, 2025

INFORMATION



# எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்கு தாரும்!

இயேசு தம்முடைய சீஷர்களுக்கு ஜெபிக்க கற்றுக்கொடுத்த ஜெபமானது, அன்றைய நாள் முதல் அவரை பின்பற்றுகிற அனைவராலும் தொடர்ந்து ஜெபிக்கப்பட்டு வருகிற அழகானதும் எளிமையானதும், மிகவும் ஆழமானதாகவும் இருக்கிறது. இது சிறுவர்கள் கூட மனப்பாடம் செய்து பயன்படுத்தக்கூடிய ஜெபமாக காணப்படுகிற அதேவேளையில், ஆண்டவருடைய பரமண்டல ஜெபத்தினை கற்றுக்கொண்ட அறிஞர்கள், இந்த தனித்துவமான ஜெபத்தின் ஆழமான அர்த்தத்தினை நாம் இன்னும் முழுமையாக புரிந்துகொள்ளவில்லை என நம்புகின்றனர்.

ஆண்டவருடைய பரமண்டல ஜெபமானது இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ஆண்டவர் பிதாவாக இருப்பது, அவரது பரிசுத்தம் மற்றும் அவரது இறையாண்மை போன்ற ஆண்டவருடைய முக்கிய பண்புகளுக்கூடாக அவர் யாரென்பதை குறித்து ஜெபத்தின் முதலாவது பகுதி கவனம் செலுத்துகிறது (மத்தேயு 6:9-10). ஜெபத்தின் இரண்டாவது பகுதியானது, இயேசுவை பின்பற்றுபவர்கள் தெய்வீக திட்டம், தெய்வீக மன்னிப்பு மற்றும் தெய்வீக பாதுகாப்பு போன்றவைகளை சார்ந்திருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது (மத்தேயு 6:11-13). இந்த இரு பகுதிகளையும் இயேசு அற்புதமாக இணைத்துள்ளதை அறிய முடிகிறது. ஆண்டவர் எமது பிதாவாக இருப்பதால், எமக்கு அன்றாட தேவைகளை அவர் வழங்குவார் என்றும், அவர் பரிசுத்தமுள்ளவராக இருப்பதால், எமது பாவங்களை அவரிடத்தில் அறிக்கையிட்டு அவரிமிருந்து மன்னிப்பினை மன்றாடுவதற்கும், அவர் ஆளுகை செய்பவராக இருப்பதால், எம் திராணிக்கு மேலான சோதனைகளிலிருந்து பாதுகாப்பையும், தீயதிலிருந்து விடுதலையாக்கத்தினையும் நாம் எதிர்பார்க்க முடியும்.

“எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்கு தாரும்” என்ற ஜெப விண்ணப்பமானது ஒன்றுக்கு மேற்பட்ட பல உட்கருத்துகளை வெளிப்படுத்துகிறதாக காணப்படுகிறது. முதலாவதாக, நம்முடைய பிதாவாகிய கடவுள் அணுகப்படக்கூடியவராக இருப்பதால், நம்முடைய கோரிக்கைகளை நாம் நேரடியாகவே அவரிடத்தில் முன்வைக்கலாம். இவ்வுலகத்திலுள்ள தகப்பன்மார்கள் தமது பிள்ளைகள் ஏதேனும் கேட்டால் இயல்பாகவே அவர்களுக்கு சிறந்ததை செய்வதிலும் பார்க்க, அதிக அன்போடும், மனப்பூர்வமாகவும் தமது பிள்ளைகளுக்கு மாறுத்தரம் அளிப்பதற்கு வல்லவராயிருக்கிறார் என்பதை இயேசு மத்தேயு 7:7-11 பகுதிக்கூடாக விளக்குகிறார். இயேசு கடவுளை “என் பிதா“ என தனித்துவமாக அழைத்திருக்கிறபடியினால், இயேசுவிற்கூடாக நாமும் கடவுளை “எமது பிதா” என்றழைக்கும் சிலாக்கியத்தை பெற்றிருக்கிறோம். இதனால் “ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.” (எபிரெயர் 4:16) என எழுத்தாளரால் எபிரேயருக்கு எழுதிய நிருபத்தில் இவ்விதமாக கூற முடிந்தது.

இரண்டாவதாக, இந்த ஜெபமானது தனிநபருக்குரியதென வரையறுக்கப்படவில்லை. “எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்கு தாரும்“ என்ற இந்த ஜெபத்தின் பின்னணியில் கூட்டுப்பரிமாணத்தினை பேணுகிறதாக காணப்படுகிறது. தனிப்பட்ட தேவைகளையும், விருப்பங்களையும் முக்கியத்துவப்படுத்துவது என்பது, எமது உலகமயமாக்கப்பட்ட கலாச்சார பண்புகளில் ஒன்றாகும். இதை வணிக உலகில் தமது உற்பத்திகளை விற்பதற்கான ஒரு வழியாக பயன்படுத்தும் உற்பத்தியாளர்களும், சேவை வழங்குனர்களும் காணப்படுவதால், அவ்விதமாகவே எனது தன்னலமுள்ள விருப்பங்களையும், தேவைகளையும் நிறைவேற்றுகிற அண்டசராசர சேவை வழங்குனராக கடவுளும் மாறுத்தரம் அளிப்பாரென்ற சிந்தனையானது மேலோங்குவதில் ஆச்சரியமில்லை. ஆனாலும், மனிதர்கள் அடிப்படையில் சமூகம் சார்ந்தவர்கள் என்பதால் இயேசு சமூக அக்கறையுள்ள உணர்வோடு ஜெபிப்பதற்கு நமக்கு கற்றுக்கொடுக்கிறார்.



## அதிபரின் சிந்தனையிலிருந்து

ஜவோ பூபாலன், PhD
அதிபர்

மூன்றாவதாக, “எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்கு தாரும்” என்ற இந்த ஜெபத்திற்கூடாக நமது அன்றாட தேவைகளை கடவுளிடத்தில் கொண்டு வருவதற்கு நம்மை ஊக்குவிக்கிறார். சில சமயங்களில் கிறிஸ்தவர்கள் “பூமிக்கு எந்த பிரயோஜனமும் இல்லாத ஆன்மீகவாதிகள்“ என விமர்சிக்கப்பட்டுள்ளனர். இயேசு நமது எதிர்கால நம்பிக்கை, பரலோகத்தில் பொக்கிஷங்களை சேமித்து வைப்பதை குறித்து அதிகமாக போதித்திருந்தபோதிலும், பூமிக்குரிய யதார்த்தங்களில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தியிருந்தார். இயேசு தம்முடைய பொதுவான ஊழிய காலம் முழுவதிலும், ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள் மற்றும் பலவீனமானவர்களின் அன்றாடப் பிரச்சனைகளுக்கு முன்னுரிமையளித்து, உடனடியாக மாறுத்தரம் அளித்தார். எனவே நமது அன்றாட தேவைகளை ஆழமாக அறிந்த கடவுளை நாம் ஆராதிக்கிறோம் என்ற சிந்தனையானது நமக்கு ஆறுதலை அளிப்பதுடன், அவரை பின்பற்றி நமது கிரியைகளின் மூலமாக உலகில் நாமும் இவ்விதமாக செயற்பட வேண்டுமெனவும் வலியுறுத்துகிறது.

நான்காவதாக, “எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்கு தாரும்” என்ற இந்த ஜெப விண்ணப்பமானது, நாம் விரும்புகிற எதையும் வழங்கும்படியாக கடவுளிடம் கேட்பதற்கான அனுமதிப்பத்திரம் அல்ல, மாறாக, நமது வாழ்வாதாரத்திற்கு அத்தியாவசியமான தேவையை மாத்திரம் கேட்கிற ஒன்றாகும். அப்பமும், தண்ணீரும் இயேசுவின் காலத்தில் உயிர்வாழ்விற்கு இன்றியமையாததாக இருந்ததை அடையாளப்படுத்தின. இயேசு அதை, “எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை“ என தகுதிப்படுத்துகிறார் அல்லது “உயிர்வாழ்வதற்கு அவசியமான உணவினை“ என வேறுவிதமாக இதை மொழிபெயர்க்கலாம். வனாந்தரத்தில் இஸ்ரவேலர்கள் நாற்பது வருடங்களாக அலைந்து திரிந்தபோது, கடவுள் அவர்களுக்கு வழங்கிய மன்னா வேதாகமத்தில் வெளிப்படுத்தப்படுகின்ற மிக நெருக்கமான பின்னணியாகும். அவர்களுக்கான அத்தியாவசிய தேவையாக இருந்த அம்மன்னா, அவர்களின் உயிர்வாழ்விற்கு போதுமானதாக இருந்தது.

மெய்யான ஆவிக்குரிய வாழ்வு மற்றும் கடவுளுடனான நெருங்கிய உறவின் விகிதத்திற்கேற்ப உலகப்பிரகாரமான செல்வமானது அமையும் என்று பரிந்துரைக்கக்கூடிய மிகைப்படுத்தப்பட்ட இன்றைய செழிப்பின் உபதேசம் என கூறப்படும் இறையியலுக்கு சார்பாக ஆண்டவருடைய ஜெபம் எவ்விதத்திலும் உதவவில்லை. மாறாக, மனிதர்களின் பேராசைக்கு ஆதரவளிக்காத ஆனால் எமது அடிப்படையான உடல் மற்றும் உலகப்பிரகாரமான தேவைகளை நோக்கிப்பார்த்து பதிலளிக்கிற ஒரு கடவுளை இது எடுத்துக்காட்டுகிறது.

இயேசு வாழந்த பாலஸ்தீன சமூகத்தில் சிலர் மிகவும் செல்வந்தர்களாக காணப்பட்டாலும், பெரும்பான்மையானவர்கள் ஏழைகளாகவே காணப்பட்டனர். இதுபோன்ற ஏற்றத்தாழ்வுகள் நவீன சமூகங்களிலும் காணப்படலாம். 1.6 பில்லியன் மக்கள் தொகையை கொண்ட தெற்காசியாவில், ஒரு நாளைக்கு 1 டொலருக்கும் குறைவான வருமானத்தில் வாழ்கிற 500 மில்லியனிற்கும் அதிகமான மக்கள் வாழ்கின்றனர். அதேசமயத்தில், உலகின் மிகவும் விலையுயர்ந்த வீட்டினை வானளாவ மும்பாயில் கட்டிய அதன் தெற்காசிய உரிமையாளருக்கு ஒரு பில்லியன் டொலருக்கும் அதிகமான பணம் செலவழிந்திருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

“எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்கு தாரும்” என நாம் ஜெபிக்கும்போது உலகத்தின் யதார்த்தத்தினையும் அறிந்திருப்பதானது நிச்சயமாக ஒரு மாற்றத்தினை உண்டாக்கும்.

# ஒரு கற்றல் சமூகத்தினை செழுமைப்படுத்தல்

## அதிர்ச்சிக்குள்ளானவர்களின் காயங்களை குணமாக்குதல்

### திருச்சபை எவ்வாறு உதவ முடியும்?



மாசி - பங்குனி மாதங்களில் 4 நாட்கள்:

இந்த குறுங்கால பாடநெறியானது, ஆலோசனைப்பணி பாடநெறியின் தலைவரும், அமெரிக்க வேதாகம சமூகத்தின் அதிர்ச்சிக்குள்ளாவர்களை குணமாக்கும் நிறுவனத்தின் சான்றளிக்கப்பட்ட சிரேஷ்ட பயிற்றுனருமான திலினி ஆபிரகாம் அவர்களால் வழிநடாத்தப்பட்டது. இப்பாடநெறியானது கொழும்பு இறையியல் கல்லூரியின் ஆலோசனைப்பணி பாடத்திட்டத்தின் ஒரு பகுதியென்பதுடன், இன்று எமது திருச்சபை மற்றும் சமூகத்தில் உள்ள பாடுகள், துஷ்பிரயோகம், துக்கம் மற்றும் பல பிரச்சனைகளை குறித்த ஊடாடும் அமர்வுகளை உள்ளடக்கியதாகும்.

## நூலக முகாமைத்துவம்

### ஊழியர் மேம்பாடு



மாசி 27:

நூலக முகாமைத்துவம் தொடர்பான சிறப்பு பயிற்சியில் மாகாண கல்வி நிலையங்களின் ஒருங்கிணைப்பாளர்கள் பங்குபற்றியிருந்தனர். இது கொழும்பு இறையியல் கல்லூரியின் தலைமையகம் மற்றும் வடகொழும்பு மாகாண கல்வி நிலையங்களில் உள்ள நூலகங்களில், உதவி நூலகர்களான விராஜ் ஸ்டீபன் (இடது) மற்றும் வனஜா ராஜ்குமார் (வலது) ஆகியோரால் நடாத்தப்பட்டது.

## சிறுவர் ஊழிய பாடத்திட்ட மாணவர்களுக்கான ஞானஒடுக்கம்



பங்குனி, 6 - 7:

சிறுவர் ஊழிய பாடத்திட்டத்தின் (நிகழ்நிலை) இரண்டாவது குழு மாணவர்கள், சுபோதி ஒருங்கிணைந்த கல்வி நிறுவனத்தில் இரு நாட்கள் இடம்பெற்ற பௌதீக ரீதியான ஞான ஒடுக்கத்துடன் தமது பாடத்திட்டத்தின் இறுதிக்கட்டத்தினை நிறைவு செய்தனர்.

## பணியிடத்தில் விசுவாசம்

### விசேட கருத்தரங்கு



மாசி, 14:

பணியிடம் மற்றும் வணிக வல்லுனர்கள் எவ்வாறு விசுவாசத்தினை தாம் செய்கிற பணியுடன் ஒருங்கிணைத்து, அதன் மூலமாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிற்கு விசுவாசமான சாட்சிகளாக இருக்க முடியும் என்பதை பற்றி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களுக்கான ஒரு விசேட கருத்தரங்கானது திருச்சபைக்கு வெளியிலான தொழிற்துறை இடங்களில் முப்பது ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் வாய்ந்தவரான பேச்சாளர் திரு. போல் பாலசுந்தரம் அவர்களினால் நடாத்தப்பட்டது.

## இறையியல் கல்வியை உருமாற்றுதல் (பகுதி 2)

### கல்விப்பீட உறுப்பினர்களுக்கான மேம்பாடு



பங்குனி, 10 - 11:

கொழும்பு இறையியல் கல்லூரியின் விரிவுரையாளர்கள், “இறையியல் கல்வியை உருமாற்றுதல்“ என்ற புத்தகத்தின் ஆசிரியரான முனைவர்.பெர்ரி ஷோவினால் நடாத்தப்பட்ட கல்விப்பீட உறுப்பினர்களுக்கான பயிற்சியில் ஈடுபட்டனர். கடந்த ஆண்டு இடம்பெற்ற “இறையியல் கல்வியை உருமாற்றுதல்” பற்றிய கருத்தரங்கின் தொடர்ச்சியான இப்பயிற்சியானது வளர்ந்தோரது பல்வேறுபட்ட கற்றலின் பல்வேறு அம்சங்களை ஆராய்ந்தது.

# பிரியாவிடையளித்தலும் பாராட்டும்
# வண.முனைவர் டெட் ரூபேஷ் மற்றும் ரெனாடே ரூபேஷ்

வண.முனைவர் டெட் ரூபேஷ் மற்றும் ரெனாடே ரூபேஷ் தம்பதியினர் இலங்கையில் தமது சேவையினை நிறைவு செய்து அமெரிக்க நாட்டிற்கு திரும்புவதையொட்டி, பிரியாவிடை மற்றும் பாராட்டும் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முனைவர்.டெட் ரூபேஷ் அவர்கள் 1997-ம் ஆண்டு முதல் கண்டியிலிருந்து ஒவ்வொரு வாரமும் மழை, வெயில் பாராமல் தொடரூந்து அல்லது பேரூந்தில் கொழும்பிலுள்ள கொஹுவலவிற்கு பயணித்து கல்விப்பீட விரிவுரையாளராக தனது பணியில் மிகவும் விசுவாசமாக செயல்பட்ட ஒருவராவார். ரெனாடே கொழும்பு இறையியல் கல்லூரியின் ஆலோசனைப்பணி களத்தின் பழைய மாணவியாவார். விரிவுரையாளர் பணிக்கு அப்பால், நமது இறையியல் கல்லூரியின் கல்வி விவகாரங்களுக்கான செயற்குழுவின் தலைவராகவும், ஓரினச்சேர்கை : கிறிஸ்தவ கண்ணோட்டமும் மாறுத்தரமும் என்ற கொழும்பு இறையியல் கல்லூரியின் வெளியீட்டினது இணை எழுத்தாளராகவும், கொழும்பு இறையியல் கல்லூரியின் மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்களுக்கு வழிகாட்டுனராகவும் திகழ்ந்துள்ளதுடன், தனது மனைவியான ரெனாடே அவர்களுடன் இணைந்து திருமணத்திற்கு தயாராகின்ற மற்றும் திருமண வாழ்க்கையில் கடினமான தருணங்களை எதிர்நோக்குகின்ற பல தம்பதிகளுக்கு ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார். நாற்பது ஆண்டுகளுக்கும் மேலான அவர்களின் ஊழியத்தின் மூலம் முனைவர் டெட் மற்றும் ரெனாடே இலங்கையில் ஆற்றிய ஊழியத்தின் மூலமாக விட்டுச்செல்கிற கிறிஸ்தவ அன்பின் தாக்கமானது, பிரியாவிடை நிகழ்ச்சியில் வெளிப்பட்ட பெருமளவிலான பாராட்டுக்கள் மூலமாக தெளிவாக புலப்பட்டது. அவர்கள் தமது புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்கும்போது அனைத்து ஆசீர்வாதங்களையும் பெறும்படி நாங்கள் வாழ்த்துகிறோம். என்றும் அவர்கள் என்றும் எமது நினைவுகளில் ஆழமாக நிலைத்திருப்பார்கள்!















# செயற்பாட்டில் கொழும்பு இறையியல் கல்லூரி


## ஆய்வரங்கு

## வெட்க உணர்வு சார்ந்த கலாச்சாரத்தில் தனிப்பட்ட முரண்பாடுகளின் சிக்கலான தன்மை

பங்குனி 11: இந்த ஆய்வரங்கின் பேச்சாளராக முனைவர். மனோ இம்மானுவேல் (கல்வி முன்னேற்றத்திற்கான தலைவர்) அவர்கள் கலந்துகொண்டார்கள். பேச்சாளரால் அவரது முனைவர் பட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த வெட்க உணர்வு சார்ந்த கலாச்சாரத்தில் கிறிஸ்தவர்களிடையேயான தனிப்பட்ட ஒப்புரவாக்கல் எனும் தலைப்பினை அடிப்படையாக கொண்டு இந்த ஆய்வரங்கானது அமையப்பெற்றிருந்தது.

முனைவர். மனோவிற்கு பிலிப்பைன்ஸிலுள்ள பட்டப்படிப்புகளுக்கான ஆசிய இறையியல் கல்லூரியினால் (ADSL, Philippines) சமாதான கற்கைநெறிக்கான முனைவர் பட்டமானது வழங்கப்பட்டதுடன், அவரால் சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி ஆய்வறிக்கையானது பின்பதாக, ஐக்கிய இராஜ்யத்தின் இலங்கம் அக்கடமிக் வெளியீட்டினரால் புத்தமாக வெளியிடப்பட்டது. பட்டப்படிப்புகளுக்கான ஆசிய இறையியல் கல்லூரியினால் (ADSL) சமாதான கற்கைநெறிக்கான முனைவர் பட்டத்தினை பெற்றவரும், சிலோன், தேவ சபையின் தலைவருமான வண. முனைவர். கிறிஸ்ஸோ ஹன்டி நிகழ்விற்கான அறிமுக உரையை வழங்கினார். முனைவர்.மனோவின் முன்னிலைப்படுத்தலினை தொடர்ந்து நடைபெற்ற சுவாரஸ்யமான கலந்துரையாடலானது முனைவர். பெர்ரி ஷோவின் உரிய மாறுத்தரத்துடன் நிறைவடைந்தது.








## கொழும்பு இறையியல் கல்லூரியின் புதிய பொறுப்பமை குருவானவர்

### ஆவிக்குரிய உருவாக்கம்



கொழும்பு இறையியல் கல்லூரி செயற்குழுவின் தலைவரான அதி.வண.திலோராஜ் கனகசபை அவர்கள், தற்போது கொழும்பு இறையியல் கல்லூரியின் பொறுப்பமை குருவானவராகவும் தற்போது சேவையாற்றுகிறார். இது கொழும்பு இறையியல் கல்லூரியின் ஆவிக்குரிய உருவாக்கத்திற்கான திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் ஒன்றாகும்.

## உலகளாவிய மாநாட்டில் கலந்து கொண்ட கல்விப்பீட உறுப்பினர்கள்



முனைவர்.ஜவோ பூபாலன் மற்றும் ரவீன் கல்தேரா (கல்விப்பீடாதிபதி) ஆகியோர் தாய்லாந்தில் சியாங்மாயில் தை மாதம் நடைபெற்ற தியோ குளோபல் தென்கிழக்கு ஆசிய மாநாடு 2025-ல் கலந்துகொண்டனர். அதன் கருப்பொருளாக: 'சிருஷ்டிப்பின் மணிமகுடம்: மனிதகுலம், கடவுளின் சாயல் மற்றும் வீழ்ச்சி" அமைந்திருந்தது.

The Institute

Mesa Global

முனைவர்.ஜவோ பூபாலன், ஜுலியன் தேவதாசன் (உதவி கல்விப்பீடாதிபதி), மற்றும் ஈன்ஸ்டின் பெர்ணான்டோ (இணை ஒருங்கிணைப்பாளர்: மாகாண கல்வி நிலைய பாடத்திட்டம்) ஆகியோர் பங்குனி / சித்திரை மாதங்களில் மத்திய கிழக்கு கற்கைநெறி சங்கத்தின் உலகளாவிய நிறுவனத்தினால் (MESA Global's Institute) இலங்கையின் கண்டியில் நடாத்தப்பட்ட "தலைமைத்துவ மேம்பாட்டில் சிறந்து விளங்குதல்" என்ற நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## வாழ்த்துக்கள்!



வனஜா ராஜ்குமார் (முழுநேர கல்விப்பீட உறுப்பினர்), பங்குனி, 21-ம் தினமன்று யாழ்ப்பான பல்கலைக்கழகத்திலிருந்து கிறிஸ்தவ கற்கைகளுக்கான முதுகலை பட்டத்தினை பெற்றுக்கொண்டார்.

முதுகலைப்பட்டத்திற்காக அவர், "கொழும்பு 13, தோட்டப்புற வீடுகளில் வசிக்கும் கிறிஸ்தவ குடும்பங்களின் வாழ்வாதாரம்: 2021 முதல் 2023 வரையிலான காலப்பகுதியில் உரோமன் கத்தோலிக்க திருச்சபையின் பங்களிப்பு குறித்த ஆய்வு" என்ற தலைப்பில் தனது ஆய்வறிக்கையை சமர்ப்பித்திருந்தார். கொழும்பு இறையியல் கல்லூரியின் இறையியல் இளங்கலை பழைய மாணவரான வனஜா வடகொழும்பு மாகாண கல்வி நிலையத்தின் ஒருங்கிணைப்பாளராகவும், உதவி நூலகராகவும் பணியாற்றுகிறார்.

## கொழும்பு இறையியல் கல்லூரிக்கு ஜெபத்துடனான உங்களின் தொடர்ச்சியான நன்கொடைகள் மூலமாக பங்களிப்பதற்கு நீங்கள் எண்ணுகிறீர்களா?

**1 வங்கி பரிமாற்றம் மற்றும் வெளிநாட்டு பணபரிமாற்றம் (அமெரிக்க டொலர் மற்றும் கனேடிய டொலர்)**

மேலதிக தகவல்களுக்கு எம்மை தொடர்பு கொள்ளுங்கள்

**2 கடனட்டை மூலமாக**

**கொழும்பு இறையியல் கல்லூரியின் இணையத்தளத்தில் கட்டணம் செலுத்தும் வலைவாசல் மூலமாக பணத்தினை பரிமாற்றம் செய்யலாம்**

www.cts.lk என்ற எமது இணையத்தளத்திற்கு செல்லுங்கள்,

முகப்பு பக்கத்தில் மேல் வலதுபுறத்தில் உள்ள கொழும்பு இறையியல் கல்லூரியிற்கு நன்கொடை அளிப்பதற்கு என்ற (Give to CTS) பொத்தானை அழுத்துங்கள்,

உங்கள் நன்கொடையை செலுத்துங்கள்

**3 காசோலைகள்**

கொழும்பு இறையியல் கல்லூரி என **பெயரிட்டு** (கணக்கிற்கு செலுத்தவும் என குறுக்கு கோடிட்டு), அதிபர், கொழும்பு இறையியல் கல்லூரி, 189, துட்டுகெமுனு வீதி, கொஹுவலை, இலங்கை என்ற முகவரிக்கு **அனுப்பி வைக்கவும்**.

**4 நேரடி பணக்கொடுப்பனவுகள்**

நேரடியாக கொஹுவலையிலுள்ள எமது கொழும்பு இறையியல் கல்லூரியின் தலைமை காரியாலயத்திற்கு வருகை தரவும்.

**மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்: வள மேம்பாட்டு முகாமையாளர், ரொஷல் ஹேக்கல்-ரணசிங்க**

+94 77 350 2930 | rochelle@cts.lk

உங்களை போன்ற தாராள மனப்பான்மை கொண்ட நண்பர்களின் ஆதரவினால் கொழும்பு இறையியல் கல்லூரியானது புதிய உயரங்களை எட்டி வருகிறது! கடவுளின் இராஜ்யத்திற்காக சிறந்த ஊழியர்களை பயிற்றுவிப்பதற்கு உங்களுடைய நன்கொடையானது பெரிதளவிலான மாற்றத்தினை உருவாக்கும்.